2008 ஏப்ரல் 28] [திரு. எ.வ. வேலு]

நான் இன்னொன்றை சொல்ல விரும்புகின்றேன். ஒரு குடும்ப அட்டை பெறவேண்டுமென்று சொன்னால் Commissioner Office வரைக்கும் வர வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொடர்பு கொண்டால் அங்கே அட்டை வழங்குகின்ற அளவுக்கு easy-யாக ஒரு நிலைமையை உருவாக்கிவிட்டோம். ஊர்கூடித் தேர் இழுப்பதுபோல தவறான அட்டைகளைக் களைய வேண்டுமென்று சொன்னால், இங்கே குரல் கொடுக்கின்ற பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்களும் இதற்கு உறுதுணையாக இருந்தால்தான் அகற்ற முடியும். இதற்கு உறுதுணையாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவில் இந்த விளக்கம் நம்முடைய அண்ணாச்சிக்கு போதும் என்று நிறைவு செய்கிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

***திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டு முதல் நூற்று ஆறு வரையிலான ஒன்பது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(முற்பகல் 11-10)

5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

கோரிக்கை எண் 21 – நெடுஞ்சாலைகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் துறை. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம்.